# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 245/8 — 1976 දෙසැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්දා — 1976.12.30

245/8 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1976 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய மீற்றர் முறைக்கு மாற்றல் சட்டம்***

*1 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1976 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய மீற்றர் முறைக்கு மாற்றற் சட்டத்தின் 1 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, வியாபார அமைச்சர் டிக்கிரி பண்டா இலங்கரத்தின ஆகிய யான், மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதற்கு நியமிக்கப்பட்ட தேதியாக 1977 சனவரி முதலாம் நாளை இக் கட்டளையால் நிருணயிக்கின்றேன்.*

*ரீ. பி. இலங்கரத்ன,*
*வியாபார அமைச்சர்.*

*கொழும்பு, 29.12.1976.*

***12-136***

---

*ச.வ.—ஒ. 53/73*

***1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டம்***

*1 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 1 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் அமைச்சர், ரிக்கிரி பண்டா சுபசிங்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியாக 1977, சனவரி முதலாம் நாளை இத்தால் நியமிக்கின்றேன்.*

*ரீ. பி. சுபசிங்க,*
*கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு, திசம்பர் 29, 1976.*

***12-137***

---

***1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம்***

*1971 ஆம் ஆண்டின 55 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 120(1)(இ) (XI) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட அப்பிரிவின்கீழ் தேசிய அரசுப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளை.*

*நீல் த அல்விஸ்,*
*பதில் நிதியமைச்சர்.*

*கொழும்பு,*
*1976, டிஸம்பர் மாதம் 28 ஆந் தேதி.*

***கட்டளை***

*(சந்தைப்படுத்தற்றிணைக்களத்தினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்திலிருந்து அல்லது 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தொழிற் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளுதற்) சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தினால் கொள்ளப்பட்ட அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிற் பொறுப்பு முயற்சியிலிருந்து வரும் மொத்த விற்பனை வரவு தவிர்ந்த) இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தினால் அல்லது பொறுப்பு முயற்சியினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்திலிருந்து வரும் மொத்த விற்பனை வரவு, வியாபார மொத்த விற்பனை வரவு வரியினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

***12-138/1***